RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s2126

# பிள்ளைத்தமிழ் கூறும் ஊசலின் மொழி

ந. தமிழரசி [அ, *], ஆ. மகாலட்சுமி [அ]

[அ] தமிழ்த்துறை, நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி-642001, தமிழ்நாடு, இந்தியா.

# Swing Game in Pillaithamizh Literature

N. Tamilarasi [a, *], A. Mahalakshmi [a]

[a] Department of Tamil, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi-642001, Tamil Nadu, India

* Corresponding Author: tamilgokult@gmail.com

Received: 30-08-2022
Revised: 05-10-2022
Accepted: 08-10-2022
Published: 15-11-2022

Check for updates

**ABSTRACT**

The time when man used to live in harmony with nature has changed and the life of living with machines has started. Due to this, we have lost our happiness, sleep, physical health etc. and as a gift we are receiving many types of unknown diseases. Since ancient times, Tamil people have given importance to sports and many games which are very helpful in maintaining health. So, they could live longer without disease. Games brings out the spirit of giving up and equanimity of success and failure among children. In ancient times, they used to catch the tentacles of the banyan tree and play. Then they tied ropes to the trees and played. Everything around the world changes according to the current changing environment. The swing occupies a special place not only in the worship of men but also in the worship of God. Thus, the article overall describes about the games that are played during the ancient period and particularly about swing game.

**Keywords:** Pendulum, Ammanai, Sirtil, Siruparai, Thazhai, Gnazhal

## முன்னுரை

விளையாட்டு என்பதே மக்களை மனம் மகிழச் செய்யும் ஒரு நிகழ்வாகும். இவ்விளையாட்டுகள் வீரத்தை அடிப்படையாகக் கொண்டும், பொழுதுபோக்குகளை அடிப்படையாகக் கொண்டும் அமைகிறது. ஏறுதழுவுதல், வட்டக்கல் தூக்குதல் போன்றன வீரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்த விளையாட்டுகள் ஆகும். கிட்டிப்புள், ஊஞ்சல், பல்லாங்குழி போன்றன பொழுதுபோக்குக்காகவும் மனமகிழ்ச்சிக்காகவும் ஆடப்படும் விளையாட்டுகளாகும். குழந்தைப்பருவத்து விளையாட்டுக்கள் குறித்து பல இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. அவ்வகையில் பிள்ளைத்தமிழ் இலக்கியங்களிலும் ஆண்,பெண் விளையாட்டுக்கள் குறித்து கூறப்பட்டுள்ளது. சிற்றில், சிறுபறை, சிறுதேர் என்பன ஆண் குழந்தைகளுக்கான விளையாட்டுகளாகவும், நீராடல், அம்மானை, ஊசல் என்பன பெண் குழந்தைகளுக்கான விளையாட்டுகளாகவும் பிள்ளைத்தமிழ் குறிப்பிடுகிறது. பிள்ளைத்தமிழ் கூறும் பத்து பருவங்களுள் ஊசல் பருவமும் ஒன்று. அத்தகைய ஊசற் பருவத்தில் இறைவி ஊசலாடும் போது உண்டாகும் நிகழ்வுகளைக் குறித்து இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.

## ஆய்வு முறை

கொங்கு நாட்டைச் சார்ந்த சிவத்தலங்களான திருமுருகன்பூண்டி, பவானி, ஒற்றைக்கால் மண்டபம் போன்ற திருத்தலங்களில் எழுந்தருளியுள்ள இறைவனுடன் உடனமர் இறைவியைப் புகழ்ந்து பிள்ளைத்தமிழ் இலக்கியங்கள் பாடி உள்ளனர். அந்த நூல்களில் கூறப்பட்டுள்ள ஊசல் பருவத்தில்

இறைவி ஊசலாடி உயிர்களுக்கு அருளும் தன்மையையும், வீடுபேற்றை உணர்த்தும் தன்மையையும் எடுத்துரைப்பதாக இவ்வாய்வு அமைகிறது.

## சங்ககாலத்தில் ஊசல்

சங்க காலம் முதல் ஊசல் விளையாட்டானது சிறப்பிடம் பெறுகிறது. அசோகமரம், ஆலமரம், ஞாழல்மரம்,தாழைமரம்,வேங்கை மரம் போன்ற மரங்களில் ஊசல் கட்டி விளையாடிய செய்திகள் சங்கஇலக்கியத்தில் இடம்பெற்றுள்ளன.

"செக்கர் ஞெண்டின் குண்டு அளை கெண்டி,

ஞாழல் ஓங்கு சினைத் தொடுத்த கொடுங் கழித்

தாழை வீழ் கயிற்று ஊசல் தூங்கி"

என்ற வரிகளில் வளைந்த உப்பங்கழியில் உள்ள தாழையின் விழுதுகளால் ஆன கயிற்றால் ஞாழல் மரத்தின் உயர்ந்த கிளையில் கட்டிய ஊசலில் ஆடினர் (Balasubramanian, 2017). அவ்வாறு ஊசல் ஆடுவதை ஊசல் தூங்குதல் என்றும் வழங்குவர்.பனை நாரால் திரிக்கப்பட்டக் கயிற்றாலான ஊஞ்சலில் தலைவியை அமரவைத்துத் தோழிகள் ஊஞ்சலை ஆட்டிவிடுகின்றனர் :ஆனால் தலைவியோ தலைவன் வராததால் ஊசலாட மறுக்கின்றாள் என்பதை,

"பெருங் கயிறு நாலும் இரும் பனம் பிணையல்

பூங் கண் ஆயம் ஊக்க, ஊங்காள்,

அழுதனர் பெயரும் அம் சில் ஓதி"

என்ற வரிகளில் அஞ்சில் அஞ்சியார் குறிப்பிடுகிறார் (Balasubramanian, 2017). ஊஞ்சல் விளையாட்டானது தானாக ஆடுவது அல்லது பிறர் ஆட்டி விடுவது என்றவாறு அமைகிறது.தற்போது அனைத்து பூங்காக்களிலும் சிறுவர் சிறுமியர்கள் இம்முறையிலேயே விளையாடி வருகின்றனர் என்பதை அறியமுடிகிறது.

## ஊஞ்சல் ஆடுவதால் உண்டாகும் பயன்கள்

ஊஞ்சல் ஆடுதலை 'ஊசல் தூங்குதல்' என்றும் கூறுவர். கொங்குநாட்டார் இதனைத் '**தூளி**' என்றும் 'தூரி' என்றும் வழங்குகின்றனர். ஊஞ்சல் ஆடுவது எல்லோருக்கும் பிடித்த ஒன்றாகும். வீட்டில் இருக்கும் உபகரணங்களில் பெண்களுக்கு அதிக மகிழ்ச்சியைத் தரக்கூடியது ஊஞ்சல் தான்.முன்பெல்லாம் ஊருக்கு வெளியே ஆலமரத்தில் ஊஞ்சல் கட்டி பெண்கள் ஆனந்தமாக விளையாடினார்கள். பின்பு இவ்வழக்கம் படிப்படியாக குறைந்து காணாமல் போய்விட்டது. இந்த ஊஞ்சல் ஆடல் உடல் ஆரோக்கியத்திற்கு மட்டுமல்ல மன ஆரோக்கியத்திற்கும் ஏற்றது. அதனால் தான் வீடுகளில் தவறாமல் ஊஞ்சல் அமைக்கிறார்கள். இடவசதி குறைவாக உள்ளவர்களும் வாங்கி பயன்படுத்தும் வகையில் ஊஞ்சல்கள் வடிவமைக்கப்பட்டு இப்போது விற்பனைக்கு வருகின்றன.

ஊஞ்சல் ஆடுவதால் மனதில் உள்ள எதிர்மறை எண்ணங்கள் விலகி நேர்மறை எண்ணங்கள் உருவாகின்றன. மகிழ்ச்சி பெருகி, எதிர்காலம் பற்றிய வளமான எண்ணங்களும் தோன்றுகின்றன. திருமணங்களில் ஊஞ்சல் சடங்கு இதனடிப்படையிலேயே நடத்தப்படுகிறது. ஊஞ்சல் ஆடுவதால் மனச்சோர்வு நீங்கி உடல் உற்சாகம் பெறுகிறது. நேராக அமர்ந்து கைகளை உயர்த்தி இரு பக்கச் சங்கிலிகளையும் பிடித்துக் கொண்டு வேகமாக ஆடும்போது முதுகுத்தண்டில் ரத்த ஓட்டம் பாய்ந்து மூளை சுறுசுறுப்படைகிறது. தோட்டத்தில் அமைக்கப்பட்டிருக்கும் ஊஞ்சலில் ஆடுவது அதிக பலனைத் தரக்கூடியது. மரம் செடிகளிலிருந்து வரும் பிராணவாயு வேகமாக உடல் முழுவதும் பரவி ரத்தத்தை சுத்திகரிக்கும். பழங்காலத்தில் எல்லா வீடுகளிலும் வரவேற்பறையில் ஊஞ்சல் கட்டி வைத்திருப்பார்கள். இல்லத்திற்கு அழகு சேர்க்கும் கலை பொருள்களில் ஒன்றாகவும் ஊஞ்சல் விளங்கியது. இதை ஒரு தெய்வீக ஆசனம் என்றும் கூறுவர்.

ஊஞ்சல் ஆடுவது கடவுளுக்கும் மகிழ்ச்சி அளிக்கும் நிகழ்வு என்பதால்தான் கோவில்களில் இறைவனை ஊஞ்சலில் வைத்துச் சீராட்டும் வழக்கம் இன்றும் நடந்து கொண்டிருக்கிறது. இதை ஊஞ்சல் சேவை என்றும் கூறுவர். மனிதர்கள் விளையாடும் ஊஞ்சல் விளையாட்டில் மகிழ்ச்சி மட்டுமே முக்கியத்துவம் பெறுகிறது. இறைவன் ஆடும் ஊஞ்சலின் மொழி வேறானது.மனிதனுக்கு இறைச் சிந்தனையை ஊட்டி, இறைவனின் அருள் ஒன்றே நிலையானது என்ற எண்ணத்தை மனிதரிடையே விதைக்க அம்மையானவள் ஊஞ்சல் ஆடுகிறாள்.

## ஊசலாட்டம் உணர்த்தும் பதி - பசு -பாசம்

மனித வாழ்வானது தீய எண்ணங்களைக் களைந்து வீடுபேறு அடைவதையே என்ன வேண்டும் எனும் நோக்கில், பதி, பசு, பாசத்துடன் ஊசலாட்டத்தை ஒப்புமைப்படுத்திக் கூறியது சிறப்பான பகுதியாக அமைகிறது. ஊஞ்சல் ஆட்டத்தின்போது ஊஞ்சல் ஆனது முன்னேயும் பின்னேயும் சென்றுவரும். முன்னே செல்லுதல் பின்னே செல்லுதல் என்ற இரு முறையையும் காட்ட அம்மையானவள் ஊசலில் பொருந்தி ஆடுகிறாள். அவ்வாறு ஆடும்போது உயிர்களை பதிஞானம் முன்னேற்றவும், பாசஞானம் பின்னே இழுக்கவும் இரண்டுக்குமிடையே துன்பப்பட்டுக் கொண்டுள்ளன. இத்தகைய நிலையில் இருந்து உயிர்களைக் காக்க அம்மையே நீ ஊசலாட வேண்டும் என்பதை,

“இறைஞானம் முன்னேற்றும் இருள் ஞானம்பின்னுாக்கும்

இருஞானம் முறை காட்ட

ஒருதிறனின் றவூசல் ஒன்றிநீ யாடுங்கால்

ஒக்கமுன்சென்றுபின் வரும்மே

ஒருங்கறிவின் ஆன்மாக்கள் உயர்ஞானம் முன்னேற்ற

ஒருங்கறிவு பின்னிழுக்கத்

தருதிறனின் பெருமக்களை இருஞானம் தடுத்தாண்ட

தகுவாழ்வின் மிகுமக்கள்”

என்று குறிப்பிடுகிறார் (Chenniappanar, 2005). ஊஞ்சல் ஆட்டத்தின் போது சாதாரணமாக ஊஞ்சல் முன்னும் பின்னும் செல்வதை பதி ஞானத்துடனும், பாசஞானத்துடனும் இணைத்துக் கூறுவது சிறப்புமிக்க ஒன்றாகும். பதி (கடவுள்) பசு (உயிர்) பாசம் (பற்று), கயிறு, தளை)பதி ஞானம் என்பது கடவுளிடம் மனிதர்கள் கொண்டுள்ள பற்று. பாசம் என்பது நிலையில்லாத பொருள்களின் மீது கொள்ளும் பற்று. இதில் பதி ஞானமே உயர்ந்தது. இந்த ஞானமே ஆன்மாக்களை முன்னேறச் செய்யும். பாச ஞானமானது வாழ்க்கையில் பின்னே செல்லச் செய்யும். இதை மெய்க்கண்டதேவர்,

“இருதிறன் அறிவுளது இரண்டலா ஆன்மா”

என்று கூறுகிறார். பசுவாகிய உயிர்கள் பாசமாகிய பற்றை அறுத்து பசுவாகிய கடவுளுடன் இணைவதே மனித வாழ்வின் நோக்கமாக அமைய வேண்டும் என்பதை உணர முடிகிறது (Sri Chidambara Swami, 1955).

## கலிலியோ

வானவியல் அறிவியலின் தந்தையாக கலிலியோ திகழ்கிறார். அவரது முதல் கண்டுபிடிப்பு பைசா நகர தேவாலயங்களில் தொங்கிக்கொண்டிருந்த எண்ணெய் விளக்குகள் ஆகும். அவை ஆடிக்கொண்டிருந்த நேரத்தை கணக்கிட்டார். நேரத்தை கணக்கிட தனது நாடித்துடிப்பை பயன்படுத்தினார்.இந்த எண்ணெய் விளக்குகளை மையமாக வைத்துப் பிற்காலத்தில் ஊசல் மணிக்கூடுகளைக் கண்டறிந்தார். ஊசலை அதன் அலைவுக் காலத்தை வைத்து (அலைவில் எந்த நிறையை ஊசலில் கட்டினாலும் ஒரே மாதிரிதான் இருக்கும்) ஆராய்ந்தார் (Palaniappan, 2006).

## ஊசல் செல்லும் தூரமும் அன்னையின் அருளும்

ஊசலாடும் போது ஊசல் செல்லுகின்ற தூரம் அருகில் இருந்தாலும், தொலைவில் சென்றாலும் ஒரு முறை வந்து போவதற்கு ஆகும். அலைவு நேரம் ஒன்றே ஆகும் என்பதை அறிவியல் அறிஞர் கலிலியோ கூறியுள்ளார். அதைப் போன்று அன்னையை வணங்கும் அடியவர்கள் அருகில் இருந்தாலும் தொலைவிலிருந்து வணங்கினாலும் அன்னை அருள் செய்தல் அவ்விருவருக்கும் ஒரே தன்மையதே ஆகும் என்பதை,

"மாவளத்து மன்னூசல் மறித்தாடுகால் மாவெளியில்

மாதூரம் போதூரம்

மருங்கிருந்தும் சேய்சென்றும் வந்தாலும் மணித்துளிகள்

மாணுகாலம் பேணுகாலம்

நாவளத்து நன்னேரம் ஒன்றேயென நன்குரைத்தார்

நாவணங்கும் பூவணங்கே!

நகுமடியர் நன்குருகி நயம்புரிந்து நணுகுங்கால்

நன்கருகும் நனிசேய்த்தும்"

என்று குறிப்பிடுகிறார் (Chenniappanar, 2004). ஊசலானது யார் விளையாடினாலும் அது சென்று வரும் தூரம் ஒரு தன்மையதாகவே இருக்கும். அதைப் போன்று அன்னையை வணங்குபவர்கள் யாராயினும் அன்னையானவள் பாகுபாடின்றி அருளை வழங்குவாள் என்பதை அறிய முடிகிறது. இத்தகைய மாட்சிமைப்பட்ட அணிகலன்கள் அணிந்த மகளிர் ஆடும் ஊசலை திருப்பொன்னூசல் என்ற பகுதியில் மாணிக்கவாசகர் குறிப்பிட்டுள்ளார்.

"மூன்றுஅங்கு இலங்கு நயனத்தன் மூவாத

வான்தங்கு தேவர்களும் காணா மலரடிகள்

தேன்தங்கித் தித்தித்து அமுதுஊறித் தான்தெளிந்து அங்கு

ஊன்தங்கி நின்றுஉருக்கும் உத்தர கோசமங்கைக்

கோன்தங்கு இடைமருது பாடி குலமஞ்ஞை

போன்றுஅங்கு அனநடையீர்! பொன்னூசல் ஆடாமோ"

என்று கூறி சிறப்பு பொருந்திய கவளத்தை கால்களாகவும், முத்துமாலையை கயிறாகவும் கொண்ட பொன்னாலாகிய பலகையின் மீது ஏறி திருமாலும் தேடுதற்கு அறிய தாமரை மலர் போல் பிரகாசிக்கும் சிவபெருமானின் திருவடிகளைப் புகழ்ந்து பாடி பொன்னூசல் ஆடுவோம் என்கிறார். இறைவனை வாழ்த்திப் பாடிக்கொண்டே ஊஞ்சல் ஆடுவதால் அதைப் பொன்னூசல் என்று மாணிக்கவாசகர் குறிப்பிடுகிறார் (Srilasri Sundaramanika Yogeeswarar, 1929).

## ஊசல் ஆடும் முறை

ஊசலாடப் பயன்படுத்தும் பொருள்களைக் கொண்டே மனித வாழ்வின் நோக்கத்தைக் கூறும் முறையானது ஆகச்சிறந்த ஒன்றாக அமைகிறது. ஊஞ்சல் மேலேறும் போது இரு கால்களையும் நிறுத்தி ஏற வேண்டும். அவ்விரு கால்களையும் பாவம், புண்ணியமாகவும் விட்டத்தை ஊழ்வினையாகவும் அமைத்து பந்த பாசங்களை வடங்களாகவும் தொங்கவிட்டு அந்த வடங்களை இன்ப துன்பமாகிய பலகையில் இணைத்து ஊஞ்சலை அமைத்து அண்டவெளியில் அசைந்தாடுவர் என்பதை,

"பாவமொடு புண்ணியங் கால்களா வூழெனப்

பகருமது விட்டமாகப்

பாசபந் தங்கள்வட மாவின்ப துன்பமாம்

பலகையிட் டண்டகோடி

தாவுவெளி யாகவதி லான்மகோ டிகளெலாந்

தங்கியா டப்புரிந்து

தாக்குமிரு வினையொப்பு வந்துழித் திருவருட்

சாகரத் திடையமிழ்த்தி"

என்று குறிப்பிடுகிறார் (Sri Chidambara Swami, 1995). இத்தகைய ஊஞ்சலை ஆடும்போது நல்வினை தீவினை என்னும் இரு வினைகளும் தாக்குகின்ற வேளையில் இந்த ஆன்மாக்களை அருட்கடலில் ஆழ்த்தி வீடுபேறு என்னும் கரையின் மீது வேதநாயகி ஏற்றி விடுவாள் என்பதை அறியமுடிகிறது. சாதாரணமாக விளையாடும் ஊஞ்சல் விளையாட்டில் எண்ணற்றச் சிறப்புகள் அமைந்துள்ளது என்பதை உணர முடிகிறது.

## ஊசல் உணர்த்தும் நிலையாமை

உயர்ந்த மரக்கிளையில் நல்ல கயிறு, சிறந்த கொடி ஆகியவற்றால் கட்டிய ஊசலில் மகளிர் அழகாக ஊசல் ஆடுவார்கள். ஊஞ்சலாட்டத்தில் மனம் மூழ்கி வேகமாக ஆடும் போது சில நேரங்களில் ஊசல் கயிறு அறுந்து போவதும் உண்டு இதை,

"ஊசல் கயிறு அற்றால் தாய்தரையே ஆம்"

என்கிறார் மெய்க்கண்டார். ஊசல் கயிறு அற்றுப் போவதைப் போல் உயிர்கள் நிலையாமையை உணர்ந்து உயர்ந்த வீடுபேறு அடைவதையே என்ன வேண்டும். மனித வாழ்வில் மனை, செல்வம் போன்ற அனைத்தும் நிலையற்றவை. இறைகதி ஒன்றே நிலையானது. எனவே அதை உணர்ந்து இறைவனை நோக்கிச் செல்ல வேண்டும் (Sri Chidambara Swami, 1995). அவ்வாறு செல்பவர்களுக்குத் துன்பம் இல்லை என்பதை,

"தேடுமாடு நீடூசல் தெறிந்தறுந்து போதலுண்டு

தேய்ந்தவூசல் ஓய்ந்தறுதலைத்

தேர்ந்துவமை காட்டினார். தெய்வத்திற மெய்கண்டார்

தேம்புமக்கள் வம்புநிலையில்

வீடுமாடு விண்ணகம் சேர்த்திடும் விமலைநின்

வீறுவூசல் பாறுவதியை

வீழ்குடி வாழச்செயும் விச்சைசேர் வித்தகியே!

என்று கூறுவதன் மூலம் உயிர்கள் நிலையற்ற பொருள்களின் மேல் பற்றுக் கொள்ளாமல், அறம் செய்து இறைவனை அடைய வேண்டும் என்ற சிந்தனை உணர்த்தப்படுகிறது (Ponnusamy, 2016).

## ஊசல் உணர்த்தும் பிறப்பும் இறப்பும்

உலகில் தோன்றிய உயிர்கள் அனைத்திற்கும் பிறப்பு இறப்பு என்ற இரண்டு வினைகளும் உண்டு. தோன்றுதல் என்ற வினை உண்டெனில் மறைதல் என்ற எதிர்வினையும் உண்டு. இத்தகைய வினையானது ஊசலாட்டத்தை போல வருவதும் போவதுமாக இருக்கும் என்பதை ,

"எல்லாஞ் செயவல்ல விறைவிநீ யெனமறை

யிசைக்கின்ற துண்மையாயின்

ஏழையேம் பிறவிதொறும் வருவதும் போவதும்

எனுமூச லாடாமனீ

சொல்லார் தமிழ்ச்சுருதி பாடியே பூவினிற்

றோகைமார் பரவியாட்டத்

தோன்றுதன் மெய்யொளியெ மையனிற் சேந்தநற்

றொல்பவள வூசன்மீது"

என்று கூறுகிறார் (Kambar, 2012). பொன்னாலாகிய ஊசலை பெருங்கருணை அம்மை ஆடும்போது உலகமெல்லாம் ஆடுகின்றன. இவ்வுலகிலே வருதல் போதல் ஆகிய பிறவித் துன்பம் மக்களை தொடராத படி ஊசல் ஆடுக என்று அம்மையிடம் வேண்டுவதாக அமைகிறது. இதைக் கம்பர் கம்பராமாயணத்தில்,

"மாசறு பிறவி போல வருவது போவதாகி

காசறு பவளச் செங்காய் மரகதக் கமுகுபூண்ட

ஊசலில், மகளிர் ,மைந்தர்

சிந்தையோடு உலவக் கண்டார்"

என்று குறிப்பிடுகிறார். குற்றம் நிறைந்த பிறப்பை எடுத்த உயிர் இடையீடின்றி பிறத்தல் ஆகிய வருகையும் சாதலாகிய செல்லுகையையும் எய்துதல் போலாகி மகளிர் கமுக மரத்தில் ஊசல் கட்டி ஆடினர்.இவ்வாறாக ஊசலாட்டம் ஆனது பிறப்பு இறப்பை உணர்த்தும் அற்புத விளையாட்டாக உள்ளது என்பதை உணர முடிகிறது (Kambar, 2012).

## ஊஞ்சல் திருவிழா

தமிழகத்தின் பல கோயில்களிலும் ஊஞ்சல் திருவிழாவானது விமரிசையாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.மார்கழி மாதத்தில் அனைத்து சிவாலயங்களிலும் அதிகாலையில் மாணிக்கவாசகர் திருவெம்பாவை இசைக்கப்படுகின்றது. பல ஆலயங்களில் ஆருத்ரா தரிசனத்தை ஒட்டி பத்து நாள் திருவிழா நடைபெறுகின்றது. சிதம்பரம் நகரில் மார்கழி மாதத்தில் நடராசருக்கு முன்னால் திருவெம்பாவை எழுதிய மாணிக்கவாசகர் நின்று பாடும் நிகழ்ச்சி பத்து நாட்கள் நடக்கின்றன .பல ஆலயங்களில் மார்கழி ஊஞ்சல் உற்சவ நிகழ்ச்சி நடக்கிறது. இந்த விழாக்களில் மாணிக்கவாசகர் எழுதிய திருப்பொன்னூசல் பதிகம் பாடப்படுகிறது.

## தாய்லாந்தில் திருவெம்பாவையும் ஊஞ்சலும்

தாய்லாந்து நாட்டில் மார்கழி மாதத்தில் பத்து நாட்கள் திருவெம்பாவை, திருப்பாவை விழா நடத்தப்படுகிறது. தாய்லாந்து மன்னர் குடும்பத்தின் பன்னிரண்டு பாரம்பரிய விழாக்களில் திருப்பாவை, திருவெம்பாவை ஊஞ்சல் நிகழ்ச்சியும் ஒன்றாகும்.இந்த நாட்களில் சிவபெருமானும், விஷ்ணுவும் பூமிக்கு வருவதாகவும், அவர்கள் ஊஞ்சலில் ஆடுவதாகவும் கருதி விழா நடத்தப்படுகிறது. அப்போது திருவெம்பாவை பாடல்கள் பாடப்படுகின்றன. முதலில் தமிழ்- கிரந்த எழுத்துக்களில் எழுதப்பட்டு இருந்த இப்பாடல்கள் தற்போது தாய்லாந்து மொழி எழுத்துக்களின் வழியாகப் பாடப்படுகிறது. மிகப்பெரிய ஊஞ்சலில் சிவன் வேடமிட்டவர்கள் அமர்ந்து ஆடும் வகையில் தாய்லாந்தின் பல பகுதிகளிலும் இந்த விழா 1932 ஆம் ஆண்டு வரை கொண்டாடப்பட்டது. ஆனால், விபத்துக்கள் ஏற்படுவதைத் தடுக்கும் வகையில் பெரிய ஊஞ்சலில் ஆபத்தாக ஆடும் வழக்கம் தடைசெய்யப்பட்டது. பாங்காங் நகரின் கோயிலுக்குள் தற்போது இந்த விழா நடத்தப்படுகிறது.கிபி 1784 ஆம் ஆண்டு


IOR PRESS

அமைக்கப்பட்ட பழங்கால மாபெரும் ஊஞ்சல் இன்னமும் பாங்காக் நகரில் இருக்கிறது. பாங்காக் நகரில் ஒரு பாரம்பரிய அடையாளச் சின்னமாக இப்போதும் திருப்பாவை, திருவெம்பாவை ஊஞ்சல் காட்சியளிக்கிறது.

## முடிவுரை

சங்க காலம் தொட்டு இக்காலம் வரையிலும் ஊசல் விளையாட்டிற்காக தனி இடம் கொடுக்கப்பட்டுள்ளது. குழந்தைப் பருவத்தின் பெரும்பகுதியை இவ்விளையாட்டானது எடுத்துக்கொள்கிறது. ஊசல் விளையாடும்போது கவலைகள் மறந்து மனம் அமைதி அடைகிறது. இத்தகைய ஊஞ்சலை பதி,பசு, பாசத்துடனும் பொருள்களின் மேல் கொண்ட பற்று நிலையானது அல்ல என்பதை உணர்த்தவும் பயன்படுத்திய பகுதி சிறப்பானதாக அமைகிறது. இத்தகைய ஊசல் விளையாட்டானது தமிழர்களின் வாழ்வியலோடு பொருந்திய விளையாட்டுகளே என்பதை உணர முடிகிறது.

## References


Balasubramanian, K.V. (2017) Narrative Source and Text, Seventh Edition New Century Book House, Ambattur, Chennai, India.

Chenniappanar, N.I. (2004) Aruldaru Muyangapoomulai Valliammai Pillaithamil, Thirumuruganathaswamy Trust, Thirumuruganpoondi, India.

Chenniappanar, N.I. (2005) Arultharu Poongothaiannai Pillaithamil, First Edition, Asian Press, Coimbatore, India.

Kambar, (2012) Kambaramayanam (Iramavataram), with Balakantam text, Kampan Charity, Pappanayakan Palayam, Coimbatore, India.

Ponnusamy, M. (2016) History of Tamil Literature Volume-1, First Edition-May, Paristanyam, Chennai, India.

Sri Chidambara Swami, (1955) Sivajnabotham Sutra and Text, Pandyan Press, India.

Srilasri Sundaramanika Yogeeswarar, E. (1929) Tiruvasakam (with Explanatory Text on True Gnana), Tirupati Srimakant Press, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License